**வெலிகெபொல பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகெபொல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் வெலிகெபொல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 1.1508 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணிகள் 05 மற்றும் கெப் வண்டியொன்றும், ரூபா 3,520,706 கிரயமான 02 கட்டிடங்களும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஓப்பநாயக்க ஹெல போஜுன் ஹலயின் நிர்மாணக் கிரயம் ரூபா 1,418,022 குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்படுகின்றமை. | -மேற்படி- |
| (இ) | ரூபா 206,668 வருமானச் செலவினமொன்று நிலையான சொத்தாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது திருத்தப்படும் என்பது. | -மேற்படி- |
| (ஈ) | பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணங்கள், இயந்திரக் கூலி வருமானம் மற்றும் நீர் விநியோகக் கட்டணங்கள் ரூபா 609,800 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | 02 பணிகளுக்காக கடன் கொடுத்தோர் மற்றும் கடன் பட்டோர் ரூபா 4,020,702 படியாக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 சொத்து விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதி மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரமான மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 4,083,900 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | குறித்த மூல ஆவணங்கள் இல்லாதிருந்தமையால் புதிய மதிப்பீடொன்றினை மேற்கொண்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும என்பது. | வேறுபாட்டுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 371(5) இற்கு முரணாக 1988-2014 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் வழங்கப்பட்ட ரூபா 2,407,998 தொகையான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 1996-2020 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 277,046 தொகையான காலாவதியான பல்வேறு வைப்புக்கள் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பண நடவடிக்கைகளை தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், வைப்புத் தொகை தீர்ப்பனவு செய்யப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 12 பிரதான விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் மற்றும் மாகாண சபையினால் விதிக்கப்பட்ட உப விதிகள் பின்பற்றப்பட்டுள்ளன. உரிய உப விதிகள் தயாரிக்கப்படுகின்றன. | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,281,783 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,051,853 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்ப ட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,383,172 | 8,011,088 | 8,278,319 | 5,262,269 | 8,525,172 | 7,717,443 | 7,625,223 | 2,726,214 |
| வாடகை | 4,845,216 | 4,564,728 | 4,508,644 | 158,963 | 2,000,815 | 1,771,754 | 1,738,838 | 120,658 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,598,250 | 1,218,125 | 1,218,125 | - | 1,724,000 | 1,290,910 | 1,285,650 | - |
| ஏனைய வருமானங்கள் | 4,591,300 | 1,350,834 | 1,350,834 | - | 2,962,800 | 1,966,345 | 1,966,345 | - |
| | 20,417,938 | 15,144,775 | 15,355,922 | 5,421,232 | 15,212,787 | 12,746,452 | 12,616,056 | 2,846,872 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்கள் பழமையான ரூபா 1,969,517 நிலுவை வீதவரி மீதியும், 03 வருடங்களை விட பழமையான ரூபா 71,034 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி நிலவியது. | நிலுவை வீதவரிக் கட்டணங்கள் அறவிடப்படுகின்றது. 2022 ஆம் ஆண்டு முதல் ஏக்கர் வரி மீளாய்வு செய்யப்படுவதுடன், நிலுவைத் தொகையில் ரூபா 35,174 அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பலகைகள் தொடர்பில் மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்படவில்லை. 2022 ஆம் ஆண்டுக்காக ரூபா 700,000 தொகையான பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 203,775 மாத்திரம் கிடைத்திருந்தது. | 2023 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல் பலகை மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிவித்தல் பலகைகளிலிருந்தான நிலுவை வருமானம் அறவிடப்படும் என்பது. | நிலுவை வருமானம் தாமதிக்காது அறவிடப்பட வேண்டும். |
| (இ) | அனைத்து தொலைபேசி நிலைமாற்றல் கோபுரங்களிலிருந்தும் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. சபை | நிலுவைப் பணத்திற்காக நிறுவனங்களுக்கு நினைவுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்படும் என்பதும், வீதியை சீரமைக்குமாறு | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டியதுடன், சபையின் |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானமொன்றினை எடுத்திருந்த போதிலும், அத்துமீறிய நிலைமாற்றல் கோபுரமொன்றுக்கு மற்றும் அவர்களால் வீதிக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிறுவனத்திற்கு அறிவித்துள்ளமை. | தீர்மானத்திற்கமைய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 55 நிறுவனங்களில் 54 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. | அந்த நிறுவனங்களுக்கு மீள அறிவுறுத்தப்படும் என்பது. | தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டின் பின்னர் எந்தவொரு ஆதனமும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வரிச் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கு கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீடு செய்யும் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 2,031,180 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 349 நீர் மானிகள் 2023 சனவரி மாதம் வரையிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. எனினும், 449 நீர் மானிகள் செயலிழந்தமையால் நிலையான கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டவாறு காணப்பட்டது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்படியாக நீர்க் கட்டணம் ரூபா 2,700,036 தொகை அறவிடப்பட வேண்டியதுடன், அதனுள் ஒரு வருடத்தை விட பழமையான ரூபா 921,744 தொகையான மீதியொன்று காணப்பட்டது. | நீர் மானிகள் காணப்பட்ட போதிலும், அவற்றுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் சந்தையில் குறைவடைந்தமையால் அவற்றின் விலை உயர்வடைந்தமையால் சிறு தாமதமொன்று ஏற்பட்டுள்ளது. நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை. | நீர் மானிகளை பொருத்துவதற்கு மற்றும் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்தம் சுமார் 41 மெற்றிக் தொன்கள் அளவான கழிவினை அகற்றுவதற்கு 10 தொழிலாளர்கள் மற்றும் 04 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஆகியவற்றுக்காக ரூபா 5,723,324 செலவிடப்பட்ட போதிலும், கழிவினை திறந்த | கூட்டெரு நிலையத்தினை நிர்மாணித்து கூட்டெரு உற்பத்தியை ஆரம்பித்தமையால் பின்னர் திண்மக் கழிவுகளுடனான சுற்றாடல் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்பது. இரட்டை வடம் கொண்ட | திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | பரப்பில் கொட்டுவதால் சுற்றாடல் பிரச்சினைகள் உருவாகியிருந்தன. அவ்வாறே, கூட்டெரு நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 2,280,804 செலவிடப்பட்டிருந்த போதிலும், பணிகள் நிறைவு செய்யப்பட்டிராத காரணத்தால் கூட்டெரு உற்பத்திப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. உக்காத கழிவுகளுக்காக 2022 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 950,000 ரெதகையான பேலர் இயந்திரமும இரட்டை வடம் கொண்ட மின்சார விநியோகமின்றி பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | மின்சார விநியோகத்தினை பெற்றுக்கொள்ளல் மற்றும் நிர்மாணங்களுக்காக மதிப்பீடொன்று சபையின் நிதிக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை. | |
| (ஈ) | மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து 09 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 78,850 தொகையான கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | 02 கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டவாறு காணப்பட்டது. எஞ்சிய தொகையும் அறவிடப்படும் என்பது. | நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

**3.2 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 உடைந்த வாகனங்கள் கைத்தவிர்க்கப்பட்டிராததுடன், 05 வாகனங்களின் உரித்தினை சுவீகரிப்பதற்கு அல்லது மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தவிர்க்கப்பட வேண்டிய வாகனங்கள் தொட்பிலான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை மற்றும் வாகனங்களை சுவீகரித்தல் உள்ளூராட்சி திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கமைய இடம்பெறும் என்பது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |